## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF : Judicial Magistrate, Thuraiyur.
Case No. : CC. 131 of 2023
Prosecution Witness : PW 2

19.05.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Calling | : கூலிவேலை |
| Father Name | : பெருமாள் | | : |
| Village | : காளிப்பட்டி | Age | : 40 |
| Taluk | : துறையூர் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை–

நான் தற்போது காளிப்பட்டியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 21.02.2023 அன்று காலை 11.00 மணியளவில் துறையூர் காவல் நிலைய போலீசார் காளிப்பட்டியில் விபத்து நடந்த இடத்திற்கு வந்து பேப்பரில் ஆய்வு செய்து எழுதிக்கொண்டிருந்தார்கள். நான் அப்போது அங்குள்ள டெய்லர் கடையில் உட்கார்ந்திருந்தேன். அப்போது என்னிடம் போலீசார் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். அப்போது என்னுடன் சேர்ந்த இரண்டு, மூன்று நபர்கள் இருந்தார்கள். அவர்களின் பெயர் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. **பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

போலீசார் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த தாளில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். போலீசார் அதனை எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் என் முன்னிலையில்

தான் தயார் செய்தார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும், அ.சா.1 எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்திருந்தால், என்னுடன் சேர்ந்து கையொப்பம் செய்தவரை பற்றி எனக்கு தெரியும் என்றும், நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததால் தான் அவரின் விவரம் எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

ஒப்பம்/—R.சுரேஷ் குமார்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.